# பால்யத்திருமணமும் அதன் விளைவுகளும் : ஏறாவூர் பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு

**வே. குணரத்தினம் &**
**செல்வி எம். எஸ். நூர்ஜஹான்**
சமூக விஞ்ஞானத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம் :**

**1.1 – அறிமுகம் :**

திருமணம் ஒரு முதல்நிலை நிறுவனமாகும். நிறுவனங்களில் முதலில் அமைவது திருமணந்நான். திருமணம் என்ற அச்சாணியின் மூலமே குடும்பம் அமைகிறது. உடல், உள, பொருளாதார, கலாசார முதிர்ச்சியுடைய வயதில் திருமணம் மேற்கொள்ளப்படும்போதுதான், ஒரு சிறப்பான குடும்பத்தை உருவாக்கிக்கொள்ளலாம். ஆனால் பால்யத்திருமணமானது உடல், உள, பொருளாதார, கலாசார முதிர்ச்சியற்ற தம்பதிகளுக்கிடையே இடம்பெறுவதால் அக்குடும்பமானது நலிவடைந்ததொன்றாகவே காணப்படுகின்றது. இதனால் சமூகக்கூறொன்றில் ஏற்படும் பாதிப்பு, சமூகத்தின் அனைத்துக் கூறுகளையும் பாதிக்கும். இது எதிர்காலத்தில் சமூகத்தை கீழ்நோக்கிய நகர்விற்கு இட்டுச்செல்லும் என்ற அடிப்படையில் ஏறாவூர் பிரதேசத்தை மையமாகக் கொண்டு பால்யத்திருமணத்திற்கான காரணிகள், அதனால் ஏற்படும் விளைவுகள், அதை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதற்கான ஒரு மாதிரியாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**1.2 – ஆய்வின் முக்கியத்துவம் :**

சமூகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகிறது. அவற்றுள் சில பிரச்சினைகள் வெளியுலகிற்குப் புலப்படுகிறது. சில பிரச்சினைகள் வெளிப்படுத்தப்படுவதில்லை. பால்யத்திருமணமும் அனைத்து சமூகங்களிலும் இடம்பெற்றுக்கொண்டே வருகிறது. இதனால் கூடுதலாகப்பாதிக்கப்படுபவர்கள் பெண்கள். பெண்களது சமூகத்தகுநிலையை உயர்த்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் இக்காலகட்டத்தில் இத்தகைய சமூகப்பிரச்சினையை கருப்பொருளாகக் கொண்டு ஆய்வுசெய்யவேண்டியது அவசியமான தொன்றாகும். பால்யத்திருமணம் குறித்து பொதுவாக ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் இவ்வாய்வு இடம்பெற்றுள்ளமை முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகிறது.

**1.3 – ஆய்வின் நோக்கங்கள் :**

1. பால்யத்திருமணத்தினால் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களை இனம்காணல்
2. இத்திருமணத்திற்கு தூண்டுகோலாக அமையும் காரணிகளை அடையாளம் காணல்
3. பால்யத்திருமணத்தைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை முன்மொழிதல்

**1.4 – ஆய்வு முறையியல் :**

ஆய்வு முறையைப் பொறுத்தவரை, இவ்வாய்வானது விபரண ஆய்வாக அமைந்துள்ளது. இங்கு தரரீதியான ஆய்வுமறையும் (Qualitative method) எண்ரீதியான முறையும் (Quantitative method) பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதல்நிலைத்தரவுகளை சேகரிப்பதற்காக அவதானம் (Observation)இ நேர்காணல் (Interview)இ வினாக்கொத்து (Questionnaire) ஆகிய முறைகள் கையாளப்பட்டன. அவதானத்தில் பங்குபற்றல் அவதானம் (Participatory observation) மூலமே தரவுகள் திரட்டப்பட்டன. நேர்காணலில் கட்டமைக்கப்படாத நேர்காணலே பயன்படுத்தப்பட்டது. வினாக்கொத்து முறையில் திறந்தவினாக்கொத்து முறையே கையாளப்பட்டது. இம்முறைகள் இவ்வாய்வு நோக்கத்தின் நிறைவுபடுத்தலுக்கான மக்களது உளப்பாங்குகள், கருத்துக்கள் என்பனவற்றை சுதந்திரமாகப் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமாக அமையும் என்று கருதப்பட்டதால் தெரிவுசெய்யப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகள் பிரதேச செயலக அறிக்கைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றிலிருந்தும் பெறப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தின் சமூகக்கட்டமைப்பின் பரந்துபட்ட தன்மை காரணமாக, தரவுசேகரிக்கும் பொருட்டு மாதிரி எடுப்பு கையாளப்பட்டுள்ளது. இங்கு எழுமாற்று ரீதியான மாதிரியே (Random Sampling) கையாளப்பட்டது.

**1.5 – முடிவுரை :**

பால்யத்திருமணம் சிறுவர்கள் என்ற வயதுவரையறைக்குள் நிகழ்வதால் இது பாரிய பிரச்சினையாகும். இதனைத்தடுப்பதற்கு சமூகச்சட்டங்கள் சீர்திருத்தப்படவேண்டியதன் அவசியம் இவ்வாய்வின் மூலம் புலப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு குடும்பமும், சமூகமும் பால்யத்திருமணத்தைத் தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வதன் மூலமே இத்திருமணம் தடுக்கப்பட முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக சிறுவர்களின் திறமைகள், உரிமைகளைத் தவிர்த்து இடம்பெறும் இத்திருமணத்தை அவர்களுக்கு உரிய கல்வியைக் கொடுத்து, அறிவை வளர்த்து, சுகவாழ்வைப் பேணி சுதந்திர பிரஜையாக வாழக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்குவதன் மூலமே தடுக்கப்பட முடியும்.